சென்னை, சமூக நல ஆணையாகத்தில் நேற்று (04.01.2025) சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி.கீதாஜீவன் தலைமையில் தமிழ்நாடு மறுசீரமைக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் நலவாரியத்தின் நான்காவது கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அரசு செயலாளர் திருபதி சிஜி தாமஸ் வைத்யன், மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் திருமதி எம். லக்ஷ்மி, மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் க.கதன், (ஒய்வு) மற்றும் அரசு உயர் அலுவலர்கள், நல வாரியத்தின் அலுவல் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

முகச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட

செல்வி தான்யா குடும்பத்திற்கு இலவச வீடு !

முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜன.5- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.1.2025) தலைமைச் செயலகத்தில், முகச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டு, முகச் சீரமைப்பு அறுவை சிகிச்சை மேற்கொண்ட செல்வி. தான்யாவின் தாயார் திருமதி.சௌபாக்யா அவர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம் பாக்கம் கிராமத்தில் புதிதாக கட்டப்பட்ட வீட்டிற்கான சாவியினை வழங்கினார். மேலும், திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பானவேடு தோட்டம் கிராமத்தைச் சார்ந்த மாற்றுத்திறனாளி செல்வி. அனுசுயாவிற்கு தானியங்கி சக்கர நாற்காலியை வழங்கினார்.

திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட மோரை ஊராட்சி வீராபுரம் பகுதியைச் சார்ந்த திருமதி. சௌபாக்யா மற்றும் ஸ்டீபன் ஆகியோரின் மகளான செல்வி.தான்யா என்பவர் முகச்சி தைவு நோயினால் பாதிக்கப்பட்டு அவதியுற்ற நிலையில் முதல்வர் அவர்களுக்கு குறுஞ்செய்தி மூலம் தன்னிலை குறித்து தெரிவித்ததன் அடிப்படையில் முதலமைச்சர் அவர்கள், சிறுமி தான்யாவின் உடல் நிலையினை கருதி அறுவை சிகிச்சை செலவு முழுவதை யும் ஏற்றதுடன் சிறுமி கேட்டுக் கொண்டதன் பேரில் அவர்களின் பெற்றோருக்கு இலவச வீட்டு மனையினை வழங்கி அரசின் மூலம் வீடு கட்டித்தர ஆணையிட்டார்.

மறுவாழ்வு அளித்த முதல்வருக்கு நன்றி!

அதனை தொடர்ந்து, திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம், பாக்கம் கிராமத்தில் 3 சென்ட் வீட்டு மனை அரசின் சார்பில் வழங்கப்பட்டது. மேலும், அந்த மனையில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் வீடுகட்டி முடிக்க ப்பட்டு, அவ்வீட்டிற்கான சாவியினை முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் திருமதி சௌபாக்யா அவர்களிடம் வழங்கினார். தனக்கு மறு வாழ்வு அளித்து இலவச வீடு வழங்கியதற்காக சிறுமி தான்யா மற்றும் அவரது பெற்றோர் முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

மாற்றுத்திறனாளி செல்வி. அனுசுயாவிற்கு அவர்களுக்கு தானியங்கி சக்கர நாற்காலி

அதனைத் தொடர்ந்து, பூந்தமல்லி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பானவேடு தோட்டம் கிராமத்தைச் சார்ந்த செல்வி. அனுசுயா என்னும் மாற்றுத்திறனாளி தனது உடல்நிலை குறித்து தெரிவித்து தானியங்கி சக்கர நாற்காலி வழங்கிட வேண்டி முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

அவரது கோரிக்கையை ஏற்று, முதலமைச்சர் அவர்கள் செல்வி. அனுசுயாவிற்கு நேற்று தானியங்கி சக்கர நாற்காலியை வழங்கினார். அதனை பெற்றுக் கொண்ட செல்வி அனுசுயா முதலமைச்சர் அவர்களுக்கு தனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் ஆகியோர் உடனி ருந்தனர்.

விருதுநகர் மாவட்ட பட்டாசு ஆலையில் வெடி விபத்து!

உயிரிழந்த 6 பேரின் குடும்பத்தினருக்கு தலா ரூ.4 லட்சம் நிதி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜன. 5 - விருதுநகர் மாவட்டம், கோட்டையூர் கிராமத்தில் இயங்கிவரும் தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து தமிழ் நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப் பதாவது:-

விருதுநகர் மாவட்டம் மற்றும் வட்டம் கோட்டையூர் கிராமத்தில் செயல்பட்டுவரும் தனியார் பட்டாசு ஆலையில் நேற்று (4.1.2025) காலையில் மருந்து கலக்கும் அறையில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் அருப்புக்கோட்டையைச் சேர்ந்த சிவகுமார் (வயது 56) த/பெ. சிவசுப்பிரமணியன், குருந்தமடத்தைச் சேர்ந்த வேல்முருகன் (வயது 54) த/பெ. கோபால் மற்றும் காமராஜ் (வயது 54) த/பெ. சுப்பு, வீரார்பட்டியைச் சேர்ந்த கண்ணன் (வயது 54) த/பெ. ராமசாமி, அருப்புக்கோட்டையைச் சேர்ந்த மீனாட்சி சுந்தரம் (வயது 46) த/பெ.சக்திவேல், செட்டிக் குறிச்சியைச் சேர்ந்த நாகராஜ் (வயது 37) த/பெ. ராஜாமணி ஆகிய 6 நபர்கள் உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இவ்விபத்தில் காயமடைந்து மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் ஆவுடையாபுரத்தைச் சேர்ந்த முகமது சுதீன் என்பவருக்கு சிறப்பு சிகிச்சையளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா நான்கு இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில்

ரூ. 6 கோடியே 62 இலட்சம் மதிப்பீட்டில் துறைச் சார்ந்த அரசு கட்டடங்கள்!

உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் திறந்து வைத்தார்!

தஞ்சாவூர், ஜன.5

தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரத்தநாடு, திருவோணம், மதுக்கூர், பட்டுக்கோட்டை, பேராவூரணி, மற்றும் சேதுபாவாசத்திரம் ஒன்றியங்களில் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர்.கோவி. செழியன் நேற்று (04.01.2025) திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன் தலைமையில் நடைபெற்றது.

தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன் (திருவையாறு), கா.அண்ணாதுரை (பட்டுக்கோட்டை), என்.அசோக்குமார் (பேராவூரணி) ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு ஒன்றியம் பளாம்புத்தூர் ஊராட்சியில் ரூ.42.65 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கிராம செயலக கட்டடமும், ரூ.38.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நேரடி நெல் கொள்முதல் நிலைய கட்டடமும், திருவோணம் ஒன்றியம் நெம்மேலி திப்பியகுடி ஊராட்சியில் ரூ.30.55 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடமும், அடம்பை ஊராட்சியில் ரூ.13.37 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மைய கட்டடமும், வெட்டுவ கோட்டை ஊராட்சியில் ரூ.12.70 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொதுவிநியோகக் திட்ட கட்டடமும், ரூ.16.45 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மைய கட்டடமும், அக்கரை வட்டம் ஊராட்சியில் ரூ.13.75 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொது விநியோகக் திட்ட கட்டடமும், ரூ.15.27 இலட்சம் மதிப்பீட்டில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க கட்டடமும்,

மதுக்கூர் ஒன்றியம் கன்னியாக்குறிச்சி ஊராட்சியில் ரூ.12.30 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொதுவிநியோகக் திட்ட கட்டடமும், புலவஞ்சி ஊராட்சியில் ரூ.30.10 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடமும், வட்டகுடி ஊராட்சியில் ரூ.42.95 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கிராம செயலக கட்டடமும், பட்டுக்கோட்டை ஒன்றியம் புதுக்கோட்டை உள்ளூர் ஊராட்சியில் ரூ.16.55 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மைய கட்டடமும், ரூ.12.70 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொதுவிநியோகக் திட்ட கட்டடமும்,

பட்டுக்கோட்டை நகராட்சியில் ரூ.64.00 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்’பள்ளி கட்டடமும், கார்கவயல் ஊராட்சியில் ரூ.12.70 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொதுவிநியோகக் திட்ட கட்டடமும், பேராவூரணி ஒன்றியம் பலதாளி ஊராட்சியில் ரூ.16.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொதுவிநியோகக் திட்ட கட்டடமும், பெயின்கால் ஊராட்சியில் ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மைய கட்டடமும், திருச்சிற்றம்பலம் ஊராட்சியில் ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில்புதிய அங்கன்வாடி மைய கட்டடமும், துறவிக்காடு ஊராட்சியில் ரூ.42.65 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கிராம செயலக கட்டடமும்,

சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பூவானம் ஊராட்சியில் ரூ.20.13 இலட்சம் மதிப்பீட்டில் மகளிர் குழுவிற்கான பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க கட்டடம், பூக்கரம்பை ஊராட்சியில் ரூ.30.10 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடமும், முடச்சிக்காடு ஊராட்சியில் ரூ.5.68 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொதுவிநியோகக் திட்ட கட்டடமும், மரக்கவசை ஊராட்சியில் ரூ.12.30 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொதுவிநியோகக் திட்ட கட்டடமும், அடைக்காதேவன் ஊராட்சியில் ரூ.23.62 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடமும்,

திருவதேவன் ஊராட்சியில் ரூ.42.65 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கிராம செயலக கட்டடமும், குருவிக்கரம்பை ஊராட்சியில் ரூ.23.57 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடமும் என மொத்தம் ரூபாய் 6 கோடியே 62 இலட்சத்து 17 ஆயிரம் மதிப்பீட்டில் திட்டப் பணிகளை துவக்கி வைத்து உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர்.கோவி. செழியன் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இன்றைய தினம் ஒரத்தநாடு, திருவோணம், மதுக்கூர், பட்டுக்கோட்டை, பேராவூரணி, மற்றும் சேதுபாவாசத்திரம் ஒன்றியங்களில் ரூபாய் 6 கோடியே 62 இலட்சம் மதிப்பிலான திட்டப் பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக துவக்கி வைக்கப்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் மேம்பாடு பெற வேண்டும் என்ற நோக்கில் தமிழக அரசு இத்திட்டங்களை விரைந்து செயல்படுத்தி உள்ளது.

அங்கன்வாடி மைய கட்டடம், பொதுவிநியோகக் திட்ட கட்டடம், ஊராட்சி மன்ற அலுவலக க் கட்டடம், கிராம செயலக கட்டடம், அங்கன்வாடி மைய கட்டடம், நேரடி நெல்கொள்முதல் நிலைய கட்டடம் மற்றும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க கட்டடம் போன்ற சிறப்பான திட்டப் பணிகளுக்கான புதிய கட்டடங்கள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் மகளிருக்கு மாதம் ரூ.1000 உயர் கல்வி பெறுகிற மாணவிகளுக்கு மாதம் ரூ.1000, தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு ரூ.1000 போன்ற திட்டங்களும், மக்களைத் தேடி மருத்துவம், “உங்களைத் தேடி உங்கள் ஊரில்”போன்ற திட்டங்கள் முன்னேற்ற திட்டங்களாக திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வருகிறது. பொதுமக்கள் அனைவரும் இதுபோன்ற திட்டங்களை பயன்படுத்தி க்கொள்ள வேண்டும் என உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.ராமச்சந்திரன், கே.டி.மகேஸ் கிருஷ்ணசாமி, மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி.ஆர்.உஷா புண்ணியமூர்த்தி, துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, வருவாய் கோட்டாட்சியர் திருமதி.இலக்கியா (தஞ்சாவூர்), செல்வி.ஜெயஸ்ரீ (பட்டுக்கோட்டை), ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் செல்வராஜ், ஒன்றிய குழுத் தலைவர்கள் திருமதி.சி.பார்வதி சிவசங்கர் (ஒரத்தநாடு), கி.முத்துமாணிக்கம் (சேதுபாவாசத்திரம்), வட்டாட்சியர்கள் திருமதி.சுந்தரசெல்வி (ஒரத்தநாடு), பாக்யராஜ் (பட்டுக்கோட்டை), திருமதி. தெய்வாணை (பேராவூரணி), வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அலுவலர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

‘இஸ்ரோ’ அனுப்பிய

பி.எஸ்.எல்.வி. சி60 ராக்கெட் செயல்படத் தொடங்கியது!

ஸ்ரீஹரிகோட்டா, ஜன. 5 –

இஸ்ரோ அனுப்பிய ரோபோட்டிக் கரங்கள் விண்வெளியில் செயல்பாட்டை தொடங்கியுள்ளதாக வீடியோ வெளியிடப்பட்டுள்ளது.

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டா சதீஷ் தவான் ஏவுதளத்தில் இருந்து கடந்த 30ம் தேதி பி.எஸ்.எல்.வி. சி60 ராக்கெட் மூலம் ஸ்பேடெக்ஸ் ஏ, ஸ்பேடெக்ஸ் பி செயற்கைக்கோள்கள் விண்ணில் செலுத்தப்பட்டன.

பின்னர் 2 செயற்கைக் கோள்களும் 355 கிலோ மீட்டர் உயரத்தில் புவி சுற்றுவட்ட பாதையில் நிலை நிறுத்தப்பட்டது. இந்த 2 செயற்கைக்கோள்களும், ஒரே புவி வட்ட பாதையில் குறிப்பிட்ட இடைவெளிகளில் பயணித்து வந்தன.

இந்த நிலையில், 2 செயற்கைக்கோள்களும் 2 கிலோ மீட்டர் இடைவெளியில் உள்ளதாக இஸ்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த 2 கிலோ மீட்டர் தொலைவும் சிறிது சிறிதாக குறைக்கப்பட்டு, அடுத்தகட்டமாக ஸ்பேடெக்ஸ் ஏ, ஸ்பேடெக்ஸ் பி ஆகிய இரண்டு செயற்கைக்கோள்களையும் டாக்கிங் முறையில் ஒருங்கிணைக்கும் பணி வரும் 7ம் தேதி நடைபெறுகிறது.

இதனிடையே, இஸ்ரோ வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், பி.எஸ்.எல்.வி. சி60 ராக்கெட்டில் அனுப்பப்பட்ட ரோபோட்டிக் கரங்கள் செயல்பாட்டை சிறப்புற தொடங்கியுள்ளதாக தெரிவித்துள்ளது. எதிர்கால விண்வெளி திட்டங்களுக்கு ரோபோட்டிக் கரங்கள் ஆதாரமாக திகழும் என இஸ்ரோ தனது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளது.

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் வி.செந்தில்பாலாஜி ஏற்பாட்டில்

கரூர் மாவட்டக் கழகம் சார்பில் மாபெரும் விளையாட்டுப் போட்டி!

3000 மாணவிகள் கலந்து கொண்டனர்!

கரூர், ஜன.5 -

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கரூர் மாவட்ட கழகம் சார்பில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி ஏற்பாட்டின் பேரில் 3000 மாணவிகள் கலந்து கொண்ட பிரம்மாண்ட விளையாட்டுப் போட்டி கரூர் திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் தொடங்கியது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நல்லாசியுடன், கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு கரூர் மாவட்ட அளவில் பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் பிரம்மாண்ட அளவில் கரூர் திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் தொடங்கியது. தொடங்கியது. கரூர் மாவட்ட கழகம் சார்பில், மாவட்டச் செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சருமான வி.செந்தில் பாலாஜி ஏற்பாட்டில் பிரம்மாண்டமாக நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் 3 ஆயிரம் மாணவிகள் பங்கேற்று விளையாடினர். கரூர் திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் மாணவிகளுக்கான குழு போட்டிகள் நடைபெற்றன. இன்று (ஞாயிறு) மாணவர்களுக்கான குழுப் போட்டிகள் நடைபெறுகிறது.

இதே போன்று தடகளப் போட்டிகளும் நடைபெறுகின்றன. 11ம் தேதி(சனிக்கிழமை) மாணவிகளுக்கான தடகள போட்டிகளும் 12ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை), மாணவர்களுக்கான தடகள போட்டிகளும் திருவள்ளூர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகின்றது. மாணவிகள் மாணவர்களுக்கு தனித்தனியாக 14 வயதுக்குட்பட்டவர் 17 வயதுக்குட்பட்டோர் 19 வயதுக்குட்பட்டோர், கல்லூரி அளவில் குழுப் போட்டிகள் நடைபெறுகின்றன.

கபாடி, கோகோ, வாலிபால், எறிபந்து, கூடைப்பந்து, போட்டிகள் ஒவ்வொரு பிரிவுக்கும் நடைபெற்று தனித்தனியாக முதல் இரண்டாம் மூன்றாம் பரிசுகள் என வழங்கப்படுகின்றன.

கரூர் மாவட்டத்தில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரியில் பயிலும் மாணவ மாணவிகள் மட்டும் கலந்து கொள்ளலாம். கரூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும். ஒரு போட்டியாளர் இரண்டு களப் போட்டியிலும் இரண்டு ஓட்ட போட்டியிலும் ஒரு குழு போட்டியில் மட்டுமே கலந்து கொள்ள முடியும். தடகளப் போட்டிக்கு ஒவ்வொரு பள்ளி மற்றும் கல்லூரியில் இருந்து ஒரு போட்டிக்கு இரண்டு நபர்கள் மட்டுமே கலந்து கொள்ள வேண்டும். பங்கேற்பவர்கள் அனைவருக்கும் பேருந்து கட்டணம் மற்றும் மதிய உணவு வழங்கப்படும். பள்ளி அளவில் பயன்படுத்தப்படும் நுழைவு படிவத்தை மாதிரியாக வைத்து பிறந்த தேதி, மாதம், வருடத்தை குறிப்பிட்டு நுழைவுப் படிவம் தயார் செய்ய வேண்டும். குழு போட்டியில் சிறந்த ஐந்து விளையாட்டு வீரர்கள் மற்றும் ஐந்து வீராங்கனைகளுக்கும் அதிக புள்ளிகள் பெற்ற ரெண்டு பள்ளி மற்றும் இரண்டு கல்லூரிக்கும் என 14 பரிசு கோப்பைகள் சிறப்பு பரிசாக வழங்கப்படும் தடகளப் போட்டியில் அதிக புள்ளிகள் பெறும் பள்ளி மற்றும் கல்லூரிக்கு தலா ஒரு கோப்பை வீதம் 2 கோப்பைகள் என மாவட்ட கழகச் செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான வி. செந்தில் பாலாஜி வழங்குகிறார்.

விழாவில் கழக சட்டத் துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் முனவர் ஜான், வர்த்தக அணி துணைச் செயலாளர் வே.பல்லவிராஜா, தொழிலாளர் அணி துணை செயலாளர் பி.விஜயக்குமார், குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். இளங்கோ, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி, கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி பி.சரவணன், மாவட்டக் கழக அவைத் தலைவர் டி. ராஜேந்திரன், துணை செயலாளர்கள், எம்.எஸ்.கே.கருணாநிதி, மகேஸ்வரி சுப்பிரமணி, பூவை ரமேஷ்பாபு, மாவட்ட கழக பொருளாளர் பி.வி.பரத், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சுப.ராஜகோபால், அ.சிவராமன், காலனி செந்தில், ஜி.பாலகுருபரன், எம்.துரைராஜ், கே. சுப்பிரமணி கழக பொதுக்குழு உறுப்பினர்கள் வி.கருப்பண்ணன், என்.எஸ்.ஆறுமுகம், கே.வேலுச்சாமி, விகே.டி.ராஜ்கண்ணு, பி.பி.சரவணன், சி.கருப்பையா (எ) தர்மர், கே.சாமிநாதன், ஈ.ஜாபருல்லா, ஏ.நஞ்சுண்டேஸ்வரன், ச.சிவகாமி சண்முகம், எம்.சிவசாமி, எஸ்.காளியப்பன், என்.ராமலிங்கம், பி.சிவகாமசுந்தரி,

கலாவதி சக்திவேல், பி.ஏ.குமார், கரூர் மாநகர கழக செயலாளர் எஸ்.பி.கனகராஜ், கரூர் வடக்கு பகுதி கழக செயலாளர் கரூர் கணேசன், கரூர் தெற்கு பகுதி கழக செயலாளர் க.சுப்பிரமணியன், கரூர் மத்திய கிழக்கு பகுதி கழக செயலாளர் ஆர். எஸ்.ராஜா, கரூர் மத்திய மேற்கு பகுதி கழக பொறுப்பாளர் ஆர்.ஜோதிபாசு, கரூர் மத்திய பகுதி கழக பொறுப்பாளர் வி.ஜி.எஸ்.குமார், அரவக்குறிச்சி மேற்கு ஒன்றிய செயலாளர் எம்.எஸ்.மணியன், அரவக்குறிச்சி கிழக்கு ஒன்றிய செயலாளர் என். மணிகண்டன், க.பரமத்தி தெற்கு ஒன்றிய செயலாளர் கே.கருணாநிதி, க.பரமத்தி வடக்கு ஒன்றிய செயலாளர் த.கார்த்திக், கரூர் மேற்கு ஒன்றிய செயலாளர் சி.வளர்மதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

எழும்பூர் சட்டமன்றத் தொகுதி 78வது வார்டுக்குட்பட்ட 18,19,20 ஆகிய பாகங்களில் பெருநகர சென்னை மாநகராட்சி நியமனக்குழு உறுப்பினர் 78வது வார்டு மாமன்ற உறுப்பினர், எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு வெங்கடாசலம் தெரு, தானா தெரு, முருகப்பா தெரு, கந்தப்பா தெரு, பிரசன்ன விநாயகர், கோவில் தெரு ஆகிய தெருக்களில் வீடு வீடாக நேரில் சென்று மக்களிடம் தேவைகள், குறைகள் கேட்டறிந்தார். உடன் 78அ வட்டக் கழகச் செயலாளர் ந.பாலு, 78வது வட்டக் கழகச் செயலாளர் சு.மனோகர்,பெருநகர சென்னை மாநகராட்சி சாலைத்துறை உதவிப்பொறியாளர், மின்துறை இளநிலைப் பொறியாளர், சுகதாரத்துறை சுகாதார ஆய்வாளர், திடக்கழிவு மேலாண்மைத்துறை துப்புரவு ஆய்வாளர், குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரிய உதவிப்பொறியாளர் மற்றும் வாக்குச் சாவடி நிலை முகவர்கள்(BLA2) கழக உடன்பிறப்புகள் ஆகியோர் இருந்தனர்.